## தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை - 2012

### 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிசார் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

வாடகைத் தவணை அடிப்படையில் பெறப்பட்ட 5 மோட்டார் வாகனங்களுக்குரிய பெறுமதி கணிப்பிடப்பட்டு நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்படவில்லை.

#### 1.2.2 கணக்காய்விற்கான சான்றுகளைச் சமர்ப்பிக்காமை

நிதிசார் கூற்றுக்களில் உள்ள கீழே காணப்படும் ஒவ்வொரு விடயத்திற்குமெதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| பெலிதெனிய காணி | 889,000 | உரித்துறுதி |
| தங்குமிட வசதி, உணவு, பிற செலவினம் என்பன | | |
| (கதிர்காமம்) | 1,260,320 | உறுதிப்படுத்தும் ஆவணங்கள் |

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) நிதிப் பிரமாணம் 176(3) | கதிர்காமம் இரத்தினக்கல் காணியை ஏலத்திலிடும் போது 21 ஆம் இலக்கப் பிரிவிற்குரிய நிலுவைத் தொகையான ரூபா 2,964,625 குறித்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை வழிகாட்டி 2.14.1 | மிக விசேட விடயங்களின் காரணமாக ரூபா 250,000 வரை குறித்த கூறு விலையைக் கோராது விலகியிருப்பதற்கான அங்கீகாரம் வழங்குவதற்கு நிறுவனத் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளபோதும், அதற்கு முரணாக கதிர்காமம் ஏல விற்பனைக் காணியில் பாதுகாப்பு வேலியை அமைப்பதற்காக கூறுவிலைகளைக் கோராது ரூபா 825,440 தனியார் நிறுவனம் ஒன்றிற்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) 1995 டிசெம்பர் 18 ஆந் திகதிய 340(1) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | மோட்டார் வாகனங்களைக் கைதவிர்ப்புச் செய்யும் நடைமுறை ஆரம்பிக்கு முன்னரே நிறுவனத் தலைவர், பிரதான கணக்காளர், மோட்டார் வாகன வாகன போக்குவரத்து திணைக்களப் பிரதிநிதி ஒருவர், மோட்டார் வாகன இயந்திரப் பொறியியலாளர் ஆகியோரை உள்ளடக்கிய மதிப்பீட்டுக் குழு ஒன்றினால் கைதவிர்ப்புக்குள்ளாகும் வாகனம் சம்பந்தமாக மதிப்பீட்டு அறிக்கை ஒன்றைப் பெறாது வாகனம் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2008 ஜுன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | அங்கீகரிக்கப்பட்ட எரிபொருளுக்கு மேலதிகமாகப் பெறப்பட்ட ரூபா 1,155,000 எரிபொருள் பாவனைக்காக அமைச்சின் செயலாளரது அங்கீகாரம் பெறப்படவில்லை. |
| (உ) | 2004 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | இரத்தினக்கல் அகழ்வின்போது வெளியே வரும் மண்ணை மூடும்போது மீண்டும் வெளியே வரும் மண்ணை மூடவில்லை. |
| (ஊ) | 2012 மார்ச் 9 ஆந் திகதிய NGJA/16-2/2012/Bachoe-1 இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சுற்றறிக்கை | அகழ்வின்போது பெற்றுக்கொள்ளப்பட்டு குழிகள், ஆறு, நீர் ஊற்றுக்கள், கால்வாய்களில் விழாத வண்ணம் கவனம் செலுத்த வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளாத சில சந்தர்ப்பங்கள் வெளிக்களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன. |
| (எ) | 2012 டிசெம்பர் 24 ஆந் திகதிய 49 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை | முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி ஒரு நபருக்கு ரூபா 40,000 எனும் வீதத்தில் மீளாய்வாண்டின்போது ரூபா 7,031,445 மிகையூதியமும் சேமிப்பிற்குள்ளான விடுமுறைக்காக ரூபா 3,821,351 தொகையும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறவேண்டிய கணக்குகளின் கீழ் ரூபா 1,331,949 மீதியானது 2 ஆண்டுகளுக்கு மேலாக முன்கொண்டு வரப்பட்டவாறிருந்தது. அம்மீதியில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 33,844 மீதியும் உள்ளடங்கியிருந்தது.

(ஆ) திருப்பி அனுப்பிவைக்கப்பட்ட ரூபா 3,475,412 பெறுமதியான 17 காசோலைகளில் ரூபா 30,650 க்கான 2 காசோலைகள் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்டனவாகும். அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகளின் கீழ் 10 சதவீத தடுத்து வைத்தல் பணம் (Retention Money) ரூபா 2,568,873 ஐந்து ஆண்டுகளுக்கு அதிகமாகத் தொடர்ந்து வருவனவாகும். அதனை வருமானத்தில் சோத்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதிசார் விளைவுகள் வரிக்கு முன்னரான ரூபா 350,928,300 நிகர இலாபமாக அமைந்தது. இதற்கொப்பான முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான நிகர இலாபம் ரூபா 27,812,402 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நிதிசார் விளைவுகளில் ரூபா 323,115,898 அதிகரிப்பு தென்படுகின்றது. இந்த நிதிசார் விளைவுகளின் அதிகரிப்பிற்கு கதிர்காமம் காணி ஏல விற்பனை, ஏற்றுமதிச் சேவைகள் கட்டண வருமானம், இயந்திர அகழ்வுச் சேவைகள் கட்டண வருமானம், பரிசோதனைக் கட்டண வருமானம் ஆகியன முறையே ரூபா 246,716,272 ரூபா 30,956,927 ரூபா 7,728,500 ரூபா 27,690,075 ஆல் அதிகரித்தமை காரணமாகின.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், அதிகாரசபையின் மொத்த வருமானம் மீளாய்வாண்டின்போது 144 சதவீத்தால் அதிகரித்துள்ளது. மொத்தச் செலவினம் 82 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. நிகர செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவாகிய காசுப் பாய்ச்சல் மீளாய்வாண்டின்போது ரூபா 404,192,548 ஆக அமைந்ததுடன் முன்னைய ஆண்டில் அது ரூபா 51,016,525 ஆக அமைந்ததால் செயற்பாட்டு விளைவுகளால் உருவாகிய காசுப்பாய்சல் ரூபா 353,176,023 ஆல் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஜுவலரி செங்ஹய் கண்காட்சிக்கு 22 விற்பனைக் கூடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அதில் வெளிநாட்டு அமைப்பு ஒன்றிற்கு பணம் அறவிடப்படாது 4 கூடங்கள் வழங்கப்பட்டிருந்தன. 3 கூடங்கள் பாவனையின்றி இருந்தமையால் அதிகாரசபைக்கு எற்பட்ட இழப்பு ரூபா 1,231,356 ஆகும்.

(ஆ) கலவான – கலுபாலம இரத்தினக்கல் அகழ்வுப் பொருட்களை அகற்றுவதற்கு அதிகூடிய கூறுவிலையான ரூபா 2,700,900 க்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. வெளிநபர்களது தலையீட்டைச் சுட்டிக் காட்டி ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்படுவது மறுக்கப்பட்டது. பிரதேச முகாமையாளரின் தற்றுணிபின் பேரில் மீண்டும் கூறு விலைகள் கோரப்பட்டு மற்றுமொரு ஒப்பந்தகாரருக்கு அது ரூபா 939,920 க்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, அதிகாரசபைக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 1,760,980 ஆகும்.

(இ) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் ஏற்றுமதி வருமானத்தால் பெற்ற தொகையில் நிதியம் ஒன்று நிறுவப்பட்டிருந்தது. அதில் ரூபா 92,498,578 இரசாயன கூடம் ஒன்றை நிறுவுவதற்காகத் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், அந் நிர்மாண வேலை 2013 ஜுன் மாதத்திலும் நிறைவேறாதிருந்தது.

(ஈ) உலக வர்த்தக நிலையத்தில் விற்பணைக் கூடங்களை வாடகைக்கு வழங்கியதால் 2008,2009,2010 ,2012 ஆம் ஆண்டுகளுக்கெனப் பெறப்பட வேண்டிய மொத்த வாடகை வருமானம் ரூபா 4,903,336 ஆகும். அதனைவிட பெறவேண்டிய மின்சாரக் கட்டணம் ரூபா 424,169 ஆகவிருந்தது.

(உ) இரத்தினக்கல் அகழ்வு முடிவடைந்ததும் குறித்த அகழ்வுக் குழிகளை மூடிவிடாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அது தொடர்பாகக் குறித்த அதிகாரிகள் கவனஞ் செலுத்தாமையால் நுளம்பு பரவும் நிலை உருவாகியிருந்தது.

(ஊ) ஆறுகள் நீரூற்றுகள் மற்றும் நீர் உற்பத்தியாகும் இடங்களில் அகழ்வுகள் நடைபெறுவதால் சுற்றாடல் பெருமளவு பாதிப்படைந்துள்ள சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(எ) அத்துமீறிய அகழ்வுகள் மற்றும் அத்துமீறிய வெடி பொருட்கள் பயன்படுத்தப்பட்டு கல் உடைப்பதற்கு பெகோ இயந்திரத்தைப் பயன்படுத்துவதால் மக்களது வாழ்க்கையிலும் சுற்றாடலிலும் சிக்கல்கள் எழுந்துள்ளன.

(ஏ) தலைமை அலுவலகக் கட்டிடத்தில் 2 அறைகளை வெளி நபர்களுக்கு வாடகைக்கு வழங்கியபோதும், வாடகை உடன்படிக்கை குறித்த தினத்தில் நாளது வரையாக்கப்படாமல் மீளாய்வாண்டிற்கான ரூபா 300,245 வாடகை நிலுவையாக இருந்தது.

## 3.3 பதவியணி நிர்வாகம்

2003 ஜுன் 2 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1(viii) ஆம் பந்தியின் பிரகாரம், நிறுவனத்தின் முகாமைத்துவப் பதவிகளுக்கு பிரதியீட்டுத் திட்டமெதுவும் நடைமுறைப்படுத்தப்படாமையால் நிறுவனத்தின் பெரும்பாலான நிறைவேற்றுதரப் பதவிகளுக்காக தற்காலிக, ஒப்பந்த, பதில் மற்றும் வேலை மேற்பார்வை அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. அது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதில் கடமை மற்றும் வேலை மேற்பார்வை படியாக 06 நிறைவேற்று தரப் பதவிகள் உள்ளடங்களாக 7 பதவிகளுக்கு ரூபா 729,610 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அங்கிகரிக்கப்பட்ட பதவிகளுக்கே நியமனங்கள் செய்யப்படலாம். எனினும், அங்கீகரிக்கப்படாத பதவியான சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் பதவிக்கு அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார்.

(இ) இரத்தினக்கல் சந்தைப்படுத்தல் மேம்படுத்தல் உத்தியோகத்தர் ஒருவர் 2010 ஒக்டோபர் 01 ஆந் திகதி முதல் ஆட்சேர்கப்பட்டு 27 மாதங்களுக்கு ரூபா

1,350,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் உத்தியோகத்தரிடமிருந்து எதிர்பார்த்த சேவை பெறப்படவுமில்லை.

(ஈ) அதிகாரசபை நிறுவப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 33 ஆம் பிரிவின் பிரகாரம் சுய அதிகாரப் பணிகள் மற்றும் கடமைகள் என்பனவற்றை வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கான ஊழியர்கள், முகவர்கள் சபையால் நியமிக்கப்பட வேண்டுமாயினும், அகழ்வுகளை மேற்பார்வை செய்யும் பதவிக்கான ஆட்சேர்ப்பின்போது சகல பிரதேசங்களுக்கும் ஈடுபடுத்தும் வகையில் ஆட்சேர்ப்பு நடைபெறவில்லை.

## 3.4 வெளிப்படையான ஒழுங்கீனங்கள்

கதிர்காமம் இரத்தினக்கல் காணி ஏலவிற்பனை சம்பந்தமான புதினப் பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் கொடுப்பனவு செய்ய வேண்டிய முற்பணம் காசாகக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். எனினும், அதற்கு முரணாக ஏலம் நடைபெற்று 12 நாட்களின் பின்னர் ஒரு காணித் துண்டிற்காக ரூபா 2,964,625 க்கான காசோலை ஒன்றைப் பெற்றிருந்தபோதும், அதற்குக் கொடுப்பனவு மறுக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக, நிறுவனத்திற்கு ஏற்பட்ட இழப்பு சம்பந்தமாகப் அதிகாரசபையின் பொறுப்புடைய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3.5 பிற அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மூலவளங்கள்

2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக பிறிதொரு அரச நிறுவனத்திற்கு அதிகார சபையின் பதவியணியினர் வழங்கப்பட்டிருந்தனர். விபரம் வருமாறு.

(அ) 2010 மே தொடக்கம் 2012 டிசெம்பர் வரையான காலத்தில் 2 உத்தியோகத்தர்கள் அமைச்சில் பணியாற்றப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 1,157,539 சம்பளமும் படியுமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சின் பதவியணியினரது விமானக் கட்டணம் மற்றும் பிற செலவினம் என்பவற்றிற்கு ரூபா 771,861 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) குறித்த சுற்றறிக்கைக்கு முரணாக 2012 பெப்ரவரி முதல் மே வரையான காலப்பகுதியில் சில உத்தியோகத்தர்களுக்கு விசேட படியாக ரூபா 961,000

மற்றும் போக்குவரத்து, தங்குமிட வசதி என்பவற்றிற்கு ரூபா 117,960 எனக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 3.6 ஊழியர் பணிக்கொடைக்கான நிதியேற்பாடு தொடர்பாக நிதியம் ஒன்றை உருவாக்குதல்

பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், பணிக்கொடைக் கொடுப்பனவிற்கு ரூபா 10,848,634 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த போதும், ஏற்படக்கூடிய பொறுப்புகளைத் தீர்த்து வைப்பதற்கு நிதி வழங்கப்படுவதற்கான நடைமுறை ஒன்று அமுலில் இருக்கவில்லை.

## 4. கணக்களிதகைமையும் சிறந்த ஆளுகையும்

### 4.1 ஒன்றிணைந்த செயல் திட்டம்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2012 ஆம் ஆண்டின் செயல் திட்டத்தின் பிரகாரம் நிறுவனத்தின் செயற்திறன் பின்வருமாறு இருந்தமை அவதானிக்கப்பட்டது.

| | இலக்கிடக்கட்ட பணிகள் | உள்ளபடியான செயற்திறன் |
|---|---|---|
| (i) | இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழிலின் புள்ளி விபரங்களைக் கணித்தல் | 9 மாகாணங்களில் கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் மாத்திரமே கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) | சுற்றாடலுக்கு உகந்தவாறு இரத்தினக்கல் அகழ்வுத் தொழில்நுட்பத்தை முன்னேற்றுதலும் அறிமுகஞ் செய்து வைத்தலும் | ரூபா 11.2 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டபோதும், கைவிடப்பட்ட குழிகளை மூடுவதற்கும் நாற்றுக்களை நடுவதற்குமான செயற்திட்டம் ஆண்டின்போது நடைபெறவில்லை. |
| (iii) | சகல ஆபரண உற்பத்திகளின்போதும் பெறுமதிவாய்ந்த உலோகங்களைப் பகுப்பாய்வு செய்வது மற்றும் முத்திரை | ரூபா 6.6 மில்லியனுக்காகன நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டபோதும், எதிர்பார்த்த பணி நடைபெறவில்லை. |

| | | |
|---|---|---|
| | பொறித்தல் தொடர்பான சட்டரீதியான செல்லுபடித்தன்மையைப் பெற்றுக் கொள்ளுதல் | |
| (iv) | இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலின் வேண்டுதல்களுக்குத் தேவையான ஆற்றலுள்ள மனிதவளங்களை ஏற்படுத்தல் | ரூபா 4,700,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மதிப்பிடப்பட்ட செலவினத்தின் 9 சதவீதமான ரூபா 403,106 ஊழியர் பயிற்சிக்கெனப் பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| (v) | சட்ட விரோத இரத்தினக்கல் அகழ்வுகளை நிறுத்துவதற்கு விசேட படையணியை உருவாக்குதல் | சட்ட விரோத இரத்தினக்கல் அகழ்வுகளுக்கான சுற்றிவளைப்புகளின் மூலம் ரூபா 36,100,000 மதிப்பிடப்பட்ட வருமானத்தை உழைக்கத் திட்டமிடப்பட்ட போதும் மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 24 சதவீத்தைக் குறிக்கும் ரூபா 8,706,832 வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. 321 சுற்றிவளைப்புகள் மாத்திரமே நடாத்தப்படடிருந்தன. |

(ஆ) மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தில் உள்ளடங்கிய கீழே குறிப்பிடப்பட்ட செயற்திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை.

(i) இரத்தினக்கல் மற்றும் ஆபணரக் கைத்தொழில் தொடர்பாக தேசிய திட்டமொன்றை வரைதல்

(ii) கெவுடா ஏற்றுமதியை ‘‘0’’ வரை குறைப்பதற்கு வசதி அளித்தல்

(iii) ஏற்றுமதி மேம்பாட்டுச் சபை மற்றும் இரத்தினக்கல் ஆபரணச் சங்கம் என்பவற்றுடன் இணைந்து 2013 ஆம் ஆண்டளவில் தர அபிவிருத்திக்கான வசதிகளை வழங்குதல்.

(இ) ஒன்றிணைந்த திட்டத்தின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டின்போது நிறைவேற்றப்பட வேண்டிய பின்வரும் பணிகள் நிறைவேற்றப்படவில்லை.

(i) இலங்கையில் கண்டுபிடிக்கப்படும் இரத்தினக்கற்கள் தொடார்பாக இலங்கையர்களையும் வெளிநாட்டவர்களையும் விழிப்புணர்வு அடையச் செய்வதற்கான தேசிய அரங்கத்தை (Gem Gallery) உருவாக்குதல்.

(ii) இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலின் தேவைகளுக்கெனப் பயிற்சி நிறுவனங்களுக்கு வசதிகளை வழங்குதல்.

(ஈ) தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் கீழே காணப்படும் பணிகள் நிறைவேற்றப்படவில்லை.

(i) இலங்கை இரத்தினக்கல் கைத்தொழிலிலும் ஆபரணக் கைத்தொழிலிலும் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும் ஒருங்கிணைப்பிற்குமாக இரத்தினக்கல் கைத்தொழில், ஆபரணக் கைத்தொழில் மற்றும் அரச திணைக்களங்களுக்கிடையே தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்.

(ii) இரத்தினக்கல் கைத்தொழில் மற்றும் ஆபரணக்கைத்தொழிலில் பணிபுரிபவர்களது சேவைப் பிரமாணங்கள் மற்றும் நிபந்தனைகள், குறிப்பாக அந்நபர்களது உயிருக்கோ உடலுக்கோ விபத்துக்கள் ஏற்படாது பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி நிர்வகித்தல்.

## 4.2 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஏற்றுமதி மேம்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம், வெளிநாட்டு வர்த்தகக் கண்காட்சிக்கென மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 10,000,000 ஆகும். எனினும், உள்ளபடியாகச் செலவான தொகை ரூபா 30,093,075 ஆகும்.

(ஆ) வரவு, செலவுத்திட்ட புள்ளி விபரங்களை எய்துவது 16 சதவீதம் முதல் 399 சதவீதம் வரையிலான பெறுமதியைச் சுட்டிக்காட்டியதன் காரணமாக வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது.

## 4.3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட துஜறகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வாகனப் பராமரிப்பும் கட்டுப்பாடும்

(இ) இரத்தினக்கல் அகழ்வுக்கான அனுமதிப்பத்திரப் பிரமாணங்களை மேற்பார்வை செய்தல்

(ஈ) இரத்தினக்கல் காணியில் ஏலமிடல்

(உ) வருமானக் கட்டுப்பாடு

(ஊ) மனிதவள முகாமைத்துவம்